(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 9.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, யூன் 08, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0017/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் நட்ட ஈட்டு உரிமை பெறுவதற்குள்ள பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) நட்ட ஈட்டு உரிமையாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இதுவரை எத்தனை பேருக்கு நட்டஈட்டு உரிமை வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(iv) நட்டஈட்டு உரிமை வழங்கப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0051/ '10

2.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழான இடைக்காலக் கட்டளைகள், அகற்றப்படுவதற்கு அல்லது இறுதிக் கட்டளையாக மாற்றப்படுவதற்கு முன்னர், தொடர்ந்து செல்லுபடியாகக்கூடிய அதிகபட்ச கால அளவினையும்,

(ii) சட்டத்தில் இத்தேவைப்பாடு புறக்கணிக்கப்படக்கூடியதா என்பதையும்,

(iii) கடந்த இரண்டு வருட காலத்தில் இந்தத் தேவைப்பாடு கடைபிடிக்கப்படாத சந்தர்ப்பம் இடம் பெற்றுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறான சந்தர்ப்பம் நிகழ்ந்திருந்தால், அதற்காக உள்ள நிவாரனத்தையும்,

(v) சட்டத்தை மேலும் சிறந்த முறையில் கடைபிடிக்க ஊக்குவிக்குமுகமாக, சம்பந்தப்பட்டட எவரேனும் சட்ட அதிகாரிகளுக்கு உரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0054/ '10

3.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமாகாணத்தின் ஏறக்குறைய 35 சதவீதமான பிரதேசத்தையுள்ளடக்கியுள்ள விலிகாமம் வடக்கு, உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரகடனம் எப்போது செய்யப்பட்டது என்பதையும்,

(ii) அத்தகைய பிரகடனம் இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0056/ '10

4.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்திற்குட்பட்ட அங்குணுகொலபெலஸ்ஸ கோட்டக்கல்வி காரியாலயத்தினால் மேற்பார்வை செய்யப்படும் தஹஅமுண மற்றும் ஹுன்னகும்புர ஆகிய ஆரம்ப பாடசாலைகள் 03 ஆண்டு காலமாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இரண்டு பாடசாலைகளைக் கொண்டு நடத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தின் தற்போதைய பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைக் கட்டடங்கள் அழிவடைந்தால் அந்த இழப்பை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கட்டடங்களை வேறொரு கருமத்திற்காகப் பயன்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா,

(ii) மேற்படி கட்டடங்களைப் புனரமைத்து பயன்பாட்டிற்கு எடுக்காவிடின், வேறு நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக கட்டடங்களையும் நிலத்தையும் விடுவிக்க அவர் உடன்படுவாரா?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0083/ '10

5.

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "கெமிதிரிய" மொத்த கருத்திட்டங்களுக்காக இதுவரை செலவு செய்யப்பட்ட மொத்த நிதி எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிதியில்,

(i) உத்தியோகத்தர் ஊதியங்களும் கொடுப்பனவுகளும்,

(ii) பயிற்சிப் பாடநெறிகளும் செயலமர்வுகளும்,

(iii) வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள்,

(iv) வாகனங்கள் கொள்வனவு, வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்

ஆகியவற்றுக்கு எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அக்கருத்திட்டங்களுக்காக இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0085 / ’10

6.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனாவ அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில் அப்பகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான “சந்தசிறி விக்கிரம ஆரச்சி தனிநபர் குழு” எத்திகதியில் நியமிக்கப்பட்டது என்பதையும் ,

(ii) மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அதன் சாராம்சம் யாதென்பதையும்,

(iv) சம்பந்தப்பட்ட அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டா என்பதையும்,

(v) இற்றை வரை மேற்படி அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கா மைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0099/ ’10

7.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு உரித்துடைமை பெற்றிருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு உரித்துடைமை பெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை, அவர்களின் பெயர்கள், முகவரிகள் யாதென்பதையும்,

(iii) 2004, 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களாக இருந்து பின் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்,

(ii) அவ்வாறு நீக்கப்பட்டது எந்த அடிப்படையின் கீழ் என்பதையும்,

(iii) புதிதாக இணைந்து கொண்ட சமுர்த்தி பெறுநர்கள் இருப்பார்களாயின் அவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை, அவர்களின் முகவரிகள் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0108/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரமுக வங்கியில் பணம் வைப்பிலிட்ட நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) அவர்கள் வைப்பிலிட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அப்பணத்தினை மீளளித்தல் தொடர்பாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளும், நிதித் தொகையும் யாவை என்பதையும்,

(ii) இவ்வைப்பாளர்களுள் ரூபா ஒரு இலட்சம் வீதம் மீளக் கிடைக்கப் பெற்ற வைப்பாளர்களின் பெயர், முகவரி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 60 வயதுக்கு மேற்பட்ட வைப்பாளர்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு பணம் மீளளிப்புச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(iii) ஒவ்வொரு வைப்பாளருக்கும் மீளளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0113/ '10

9.

கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திகாமடுல்ல மாவட்டத்தின் அம்பாறை தேர்தல் தொகுதியில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள,

(i) பிரதானமான குடிநீர் வழங்கல் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு நீர் வழங்கல் திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் எவையென்பதையும்,

(iii) அவற்றின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(iv) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் நீர் வழங்கப்பட்டது எத்திகதியிலிருந்து என்பதையும்,

(v) அந்த நீர் வழங்கல் திட்டத்தினூடாக குடிநீர் வழங்கப்படாத பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(vi) அவற்றிற்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அம்பாறை நகரிற்கு நீரை விநியோகிக்கும் நீர் தாங்கியின் திருத்த வேலைகள் முடிவடையும் வரை அம்பாறை நகரின் நீர் விநியோகம் தொடர்பில் தற்காலிகமாக எடுக்கும் நடவடிக்கைகள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0019/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006, சனவரி 01 ஆம் திகதியிலிருந்து இற்றைவரை இலங்கையில் சீன அரசாங்கம் அல்லது சீனக் கம்பனிகள் மேற்கொண்டுவருகின்ற அனைத்து கருத்திட்டங்களினது பெயர்களையும்,

(ii) அவை கடன், கொடை அல்லது கூட்டு முயற்சியின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்,

(iii) மேலே (i) இற்கான நிதி மூலவளங்களையும் மற்றும் அதனுடன் தொடர் புடைய அனைத்து செலவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

0052/ '10

11.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரால் (UNHCR) பொறுப்பளிக்கப்பட்டதும், 2010 ஏப்ரல் மாதத்தில் "கன்ட்றி ஒப் ஒறிஜின் றிசேர்ச் அன்ட் இன்போமேஷன்" (CORI) எனும் பெயர் கொண்ட அமைப்பொன்றினால் தயாரிக்கப்பட்டதுமான இலங்கை பற்றிய பிரதேச அறிக்கையொன்று பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அவ்வாறான பிரதேச அறிக்கைகள் குறித்தும் அவை அவற்றிற்குப் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதையும் அறிவிக்கபடுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறைகளையும்,

(ii) ஈடுபடுத்தப்படும் ஆளணியினர் மற்றும் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சி முறையியல் ஆகிய விபரங்களுடன் எவ்வாறு CORI இப்பணிக்கெனத் தெரிவு செய்யப்பட்டது என்பது பற்றிய அறிக்கை ஒன்றை UNHCR இடமிருந்து அவரால் பெறமுடியுமா என்பதையும்,

(iii) இச்செயற்பாட்டின் செலவையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அறிக்கையில் தவறுகளேதுமிருப்பின் அவை திருத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுப்பாரா எனக் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0057/ '10

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர், கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுணுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவின் பராக்கிரமபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் கு.க. 03 அல்லகல புகுமுக வீதியின் 200 மீற்றர் தற்போது கொங்கிறீட் கழன்று வெடிப்புக்குள்ளாகி, பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணிப்புக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமனங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டமைக்கான விதப்புரைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வீதியை நிர்மாணிப்பது குறித்து முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0088 / ’10

13.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் சட்டரீதியான அனுமதியின்றி ஆயுதம் ஏந்திய நபர்கள் இருக்கின்றனரா என்பதையும்,

(ii) சிவில் பாதுகாப்பு, பொலிஸ், முப்படை தவிர்ந்த வேறு ஆட்களுக்கு ஆயுதம் ஏந்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0111/ ’10

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 முதல் 2010 மார்ச் 31 வரையிலான ஒவ்வோரு ஆண்டினதும் வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை மில்லியன் ரூபாயில் தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை பற்றிய விபரத்தினை அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(இ) (i) மேற்படி அக்கடன் தொகை ரூபாவில் எவ்வளவு என்பதையும்,

(ii) இக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்,

(iii) அதற்கேற்ப ஒவ்வொரு வருடத்திலும் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூபாக்களில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0020/'10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "மகநகும" கருத்திட்டத்தை தாபிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2004.01.21 ஆம் திகதிய அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மகநகும வீதி நிர்மாணிப்பு இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தின் தற்போதைய தலைவரின் பெயர் மற்றும் இவரின் கல்வித்தகைமைகள் என்ன என்பதையும்,

(iii) மேற்படி தலைவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் இவர்களுக்கென வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப் பனவுகள் யாவையென்பதையும்,

(ii) இங்குள்ள உத்தியோகத்தர்களது பெயர்கள், பதவிகள் மற்றும் இவர்கள் பெறும் சம்பளங்கள், வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் யாவை யென்பதையும்

2007, 2008, 2009 மற்றும் 2010 ஆண்டுகளின் பொருட்டு தனித்தனியாக அவர் இச்சபைக்கு சமரப்பிப்பாரா?

(இ) மேற்படி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங் களின் எண்ணிக்கை, அவை ஒவ்வொன்றும் சொந்தமான நிறுவனங்கள் அல்லது நபர்கள் அத்துடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீடு (2010),— 2010 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளுக்கான செலவினத்திற்கு அந்நிதியாண்டின் போது தேவைப்படும் பணங்களைத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.05.04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 முதல் பி.ப. 4.30 வரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

கௌரவ லக்ஷ்மன் கிரியல்ல,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"அத்தரகல்ல ஐக்கிய பிரஜைகளுக்கான அபிவிருத்தி அமைப்பைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ லக்ஷ்மன் கிரியல்ல,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"ஐக்கிய இலங்கை பிக்குமார்களுக்கான அபிவிருத்தி அமைப்பின்
நிலையத்தைக் கூட்டிணைப்பதற்காதொரு சட்டமூலம்"

6.

கௌரவ கரு ஜயசூரிய,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"பிலியந்தல தர்மசாஸ்தரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவவைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

7.

கௌரவ கரு ஜயசூரிய,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"மட்டுப்படுத்தப்பட்ட ஶ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கத்தைக்
கூட்டிணைப்பதற்காதொரு சட்டமூலம்"

8.

கௌரவ சந்திம வீரக்கொடி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.5),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக,—

"பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்காதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 யூன் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப் படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, பெப்ருவரி 24 ஆம் திகதிய 1642/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்துமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2009 யூலை 17 ஆம் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முடிவுப்பொருட்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், சுருட்டு, சிகரட்டு, பீடி மற்றும் குழாய்ப் புகையிலை என்பவற்றை களஞ்சியப்படுத்துதல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் தொடர்பாக பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்ட கட்டளை அந்த கட்டளைகளில் இல. 1 முதல் 19 வரையான பந்திகள் அதோடு தொடர்பான ஒழுங்கு விதிகளையும் அட்டவணையையும் பிரதியீடு செய்வதன் மூலம் 2009, ஒக்தோபர் மாதம் 26 ஆம் திகதிய 1625/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்துமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (அத்தியாயம் 52) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 1985 ஓகத்து 14 ஆம் திகதிய 362/6 ஏ ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 744 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மாற்றீடு செய்வதன் மூலம் 2010, பெப்ருவரி மாதம் 12 ஆம் திகதிய 1640/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்துமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இல. 912)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 2009, திசெம்பர் 30 ஆம் திகதிய 1634/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளின் பிரகாரம், அந்த கட்டளைகளின் அட்டவணையிலுள்ள திரவ பெற்றோலிய வாயுப் பொருட்களை நீக்கி ஆக்கப்பட்டு 2010, மார்ச்சு 01 ஆம் திகதிய 1643/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபார பண்ட இனங்கள் தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, பெப்ருவரி மாதம் 09 ஆம் திகதிய 1640/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபார பண்ட இனங்கள் தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, மார்ச்சு மாதம் 19 ஆம் திகதிய 1645/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2009, மார்ச்சு 31 ஆம் திகதிய 1595 /14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் I, II, மற்றும் III ஆம் அட்டவணைகள் நீக்கப்பட்டு 2010, சனவரி மாதம் 01 ஆம் திகதிய 1634/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2005 மார்ச்சு 31 ஆம் திகதிய 1386/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட

ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்குவிதியை நீக்கி 2009, செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1620/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிகளைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0104/ ’10

1.

கௌரவ அஜித் குமார,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுனுகம்வெஹர நீர் வழங்கல் திட்டத்திலிருந்து குழாய் நீர் வழங்கபப்டும் மொத்த பாவனையாளர்களின் எண்ணிக்கை கிராம உத்தியோகத்தர் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் குழாய் நீர் விநியோகிக் கப்படும் பொது இடங்கள் யாவையென்பதையும்,

(iii) நாளொன்றுக்கு மொத்தமாக எத்தனை லீற்றர் தண்ணீர் வினியோகிக்கப் படுகின்றதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) நாளொன்றுக்கு தொடர்ச்சியாக நீர் விநியோகத்தைப் பெறும் பாவனை யாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தொடர்ச்சியாக தண்ணீர் வினியோக்கிப்படாத, நேரசூசியொன்றின் பிரகாரம் தண்ணீர் வினியோகம் இடம்பெறும் முறையை, கட்டம் கட்டமாக ஒவ்வொரு தொகுதி அடிப்படையிலும் அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) இரு தினங்களுக்கொருமுறையேனும் தண்ணீர் கிடைக்காத பாவனையாளர்களுக்கு பவுசர் மூலம் தண்ணீரை வினியோகிக்க முடியாமைக்கான காரணத்தையும்,

(ii) தண்ணீர் இணைப்புக்களை ஏற்படுத்தியுள்ள போதிலும் தண்ணீர் கிடைக்காத பாவனையாளர்களின் எண்ணிக்கையினையும்,

(iii) வெஹரகல நீர்த்தேக்கத்திலிருந்து லுனுகம்வெஹரவுக்கு செலுத்தப்படும் தண்ணீரைப் பயன்படுத்தி தொடர்ச்சியான நீர் விநியோகமொன்றை ஏற்படுத்த முடியுமாவென்பதையும்,

(iv) அது எக்காலப்பகுதியிலென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0105/ '10

2.

கௌரவ அஜித் குமார,—தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்,

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?